லக்கூட்டிய உபகாரமுழுதும் கண்ணன்பாற் சமர்ப்பிக்கப்பட்டது என்று
போந்தசெவ்வசநமோ அதுவும் கண்ணன் வடிவில் சிவாவிர்ப்பாவம் உள
து சிவாராதநபுத்தியாற்றானேயென்னுமிவ்வுண்மைபற்றியெழுந்ததாகலின்
அதுபற்றி இழுக்கின்மையுணர்க. அதனாலன்றே "ஸாசமும் நைத்தி
யகமுமாகிய தனது அந்தவுபகாரமுழுவதையும் வாசுதேவன்பால் நிவேதிக்
கப்பட்டதைத் திரியம்பகனது சமீபத்திற் கண்டான்" என்று கண்ணன்
அருச்சுனனிருவரது கைலாசயாத்திரையில் சகலவுபகாரமும் சிவசமீபத்தில்
அருச்சுனன் கண்டமை சொல்லப்பட்டது. இனிக் கீதையில் சத்தியங்களா
கிய உறுதிமொழிகள் பலவற்றையும் அருச்சுனனுக்குரைத்துத் தனது நிலை
மைமுழுதும் அவனுக்குத் தெரிவிக்கப்பட்டதெனினும் அதனால் அவன் சத்
துருக்களைக்கொன்றானென்றும் தருமனுக்குக் கண்ணனுபதேசித்த வசநத்தை யு
நுசரித்து நினது வசநத்தைச்செய்வல் என்று அருச்சுனனுரைத்தது. யுத்தமா
த்திரவிட்டயமாமெனக்கொள்ளின் ஆண்டும் "பிறரைச் சிந்தைசெய்யாதோர்"
'என்னொருவனையே சரண்புகுதி' 'அறுமேனைகளாகிய அவரது அப்புலம்
அந்தமுடையதென்றற்றொடக்கத்துவசநங்களைப் பகவான் சொல்லியதனால்
அவற்றைக்கேட்டு அவன் சொல்லியவாறே அருச்சுனனால் ஏனைத்தேவதா
க்களைவிட்டுச் சிவபிரானைச் சரண்புகுதலாகிய சிவபூஜையே செய்யப்பட்டது
என்பதில் விவாதமில்லையென்க. எனவே என்றும் தன்னாற் பூஜிக்கப்படுபவ
னாகிய சிவபிரானது மகிமையே கீதைகளிற் கண்ணனால் அருச்சுனனுக்
குபதேசிக்கப்பட்டதென்பது தெளிவித்துப் பரமாவம் சிவபிரானுக்கே உண்
டென்பது பகவற்கீதைகொண்டு நிச்சயிக்கப்பட்டதாயிற்று. அநுகீதாவ
தாரப்பிரச்சிநத்தைத் யநுசரித்துக் கீதாசிரவணசமயத்தில் சமுசயகற்பமாகி
ய ஞானம் அவ்வநுகீதாசிரவணத்தாம் திடநிச்சயமாயிற்று என்றும் ஈண்டுக்
கோடல் தக்கதென்பது. இவ்வனைத்துச்செய்யுட்களாலும் பாண்டவர்களிட
த்துச் சிவபிரானுக்குரிய அருட்பெருந்தகைமையென்னுமேதுக்கண் 'என்னாற்
றானே' யென்னும் கண்ணன் வசநம்பற்றிவரும் ஆசங்கைகளை யெதிரிட்டு அ
வற்றினுள்ளுறுபொருள்காட்டி அவையெல்லாம் அவ்வேதுவின்கண் ஆக்க
வியலவாமாறு தெளிவித்து அவ்வேதுவே மென்மேலும் வலியுறுத்தப்பட்டது.
ஈண்டுக்கூறியவாற்றால் கண்ணன் பிராமணர்களைக்காட்டினும் பாண்டவச
ம்ரக்ஷகத்துவம் சிவபிரானுக்கு அதிகமாதல் விளக்கி "மூலம் கண்ணன்
பிரமம் பிராமணர்" என்னும் மகாபாரதவசநத்தில் மூலத்துவநிரூபணம் அச்சி
வபிரானுக்கு ஆவசியகம் சொல்லற்பாலதென முடித்து அதன்கண்வரும் நிரூ
பபதமாகிய பிரமபதம் பரப்பிரமப்பொருள் சிவபிரானேயென்பதை விளக்குத
ற்கண்ணெழுந்ததென்னும் உண்மை வச்சிரலேபநஞ்செய்யப்பட்டது. இ
தனால் பரப்பிரமபாவம் சிவபிரானுக்கே யுரியதென்பதை அவன்பால் நிரூபப

